33

# கொரோனா இடர்காலச் சூழலில் யாழ்ப்பாண மக்களது ஊடக நுகர்வு : பயன்களும் மகிழ்வூட்டலும் கோட்பாட்டினை மையப்படுத்திய ஆய்வு

சிவதர்சினி பரஞ்சோதி[1], முனியப்பன் துலாபரணி[2], சிவசுப்பிரமணியம் ரகுராம்[3]

ஆய்வுச் சுருக்கம்

அன்று தொடக்கம் இன்றுவரை ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தொடர்பாடலில் ஈடுபட்டு வருகின்றான். அத்தொடர்பாடல் செயற்பாட்டை அவன் விஸ்தரிக்க முற்பட்ட சந்தர்ப்பங்களில், ஊடகங்கள் அச்சு, இலத்திரனியல், புதிய மற்றும் சமூக ஊடகங்கள் எனத் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளன எனலாம். இந்த வளர்ச்சிப் பாதையில் எதிர்பாராத சந்தர்ப்பமாக கடந்த இரு ஆண்டுகளாக ஏற்பட்ட கொரோனாப் பெருந்தொற்று அசாதாரணச் சூழ்நிலை காரணமாக மக்கள் ஓர் இடத்தில் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டது. இயங்கிக்கொண்டிருந்த தொழிற்துறைகளும், செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன. நகர்ந்துகொண்டிருந்த மக்கள் சூழ்நிலை நிர்ப்பந்தமாக ஓய்வைச் சந்திக்கத் தலைப்பட்டனர். இச்சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் மத்தியில் காணப்பட்ட ஊடகம்சார்ந்த நுகர்வு, நோக்கங்கள், பயன்பாடுகள், அவர்களது வாழ்வியல், கல்வி முறைகளில் ஊடக நுகர்வானது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், அவ் ஊடக நுகர்வால் மக்கள் எதிர்கொண்ட சவால்கள் ஆகியன கொரோனாப் பெருந்தொற்று ஆரம்பித்தது முதலாக பதினான்கு மாத காலப்பகுதியில் - தொலைக்காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (Youtube), இணையப் பயன்பாட்டின் அடிப்படையில் பயன்களும் மகிழ்வூட்டலும் கோட்பாட்டினை மையப்படுத்தி ஆய்வாளர்களால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில், யாழ்ப்பாணச் சமூகத்தினர் மத்தியில் இவ்விடர் காலச் சூழலில் வழமைக்கு மாறாக வாழ்வியல் முறைகளிலும், கல்வி முறைமைகளிலும் சமூக ஊடக நுகர்வானது அதிகரித்துள்ளமை, கொரோனா இடர்காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் அதிகளவில் புதிய ஊடகங்களை நோக்கியே நகர்ந்தமை, அதிலும் குறிப்பாகச் சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (YouTube) ஆகிய சமூக ஊடகங்களின் பாவனை அதிகரித்தமை ஆகியன ஆய்வின்வழி அடையாளங் காணப்பட்டன.

தங்களின் பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், உலகத் தகவல்கள், செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், தங்களின் தனிமையைப் போக்குவதற்காவும், தங்களின் படைப்பாக்கத் திறன்களை வெளிக்கொண்டு வருவதற்காகவும், கற்றல் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காகவும் இந்த இடர்காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் ஊடகங்களை நுகர்ந்தனர் என்பதும் யாழ்ப்பாண மக்களது சமூக ஊடக நுகர்வானது அவர்களது வாழ்வியற் சடங்குகள் மற்றும் கல்வி முறையியல்கள் ஆகியவற்றை மெய்நிகர் தளத்திற்கு நகர்த்திச் சென்றுள்ளமையும் ஆய்வின்வழி அறியப்பட்டது.

அதேவேளை, இச்சூழ்நிலையால் உடல், உளரீதியான பாதிப்புக்கள், உறவுகளிற்கிடையில் உயிர்த்துடிப்பற்ற தொடர்பாடல், யாழ்ப்பாண மக்களிடத்தில் புதிய ஊடகங்கள், சமூக ஊடகங்களைக் கையாள்வதற்குரிய போதிய தொழில்நுட்ப அறிவும் அறநெறி ஒழுங்காற்றுகையும் போதியளவில் காணப்படாமை, திறன்பேசி, கணினி ஆகிய ஊடகக்கருவிகளைத் தம்வசம் கொண்டிருப்பதற்குப் போதிய பொருளாதார வசதி இல்லாமை, சமூக ஊடகங்களிற்கு அடிமையாதல், தனிப்பட்ட உறவுநிலைகளில் முரண்பாடுகள் ஏற்படல் என இந்த இடர்காலச் சூழலில் யாழ்ப்பாண மக்கள் பல சவால்களுக்கும் முகங்கொடுக்க நேர்ந்தமையும் ஆய்வில் அவதானிக்கப்பட்டது.

## 01. அறிமுகம்

தொழில்நுட்பப் புரட்சி, முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகாயுத்தங்கள் காரணமாகத் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட துரித மாற்றங்கள் வெகுசன ஊடகங்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரவலில் தாக்கம் செலுத்தின. உலக யுத்தத்தின் பின்னர் போர் தொடர்பான தகவல்களை முன்வைப்பதற்கும், அவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள் பிற்காலத்தில் மக்களுக்காக மகிழ்வூட்டல், கல்வி மற்றும் தகவல் வழங்கவும் பயன்படுத்தப்பட்டன. இப்போக்கு, இன்று தகவல்தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் பேறாக, பூகோள மயமாதலின் வளர்ச்சியாக மிக உன்னதமான பிணைப்பை உலக மக்களிடையே புதிய ஊடகங்கள் வரையிலாக ஏற்படுத்தியுள்ளது.

### 1.1. ஊடக வளர்ச்சியும் தாக்கங்களும்

இத்தகைய ஊடக நகர்வுகள் மக்களின் ஊடக நுகர்வுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வந்ததும், வருவதும் கண்கூடு. நாளாந்த வாழ்க்கையில் நாட்டுநடப்புகளை அறிந்துகொள்வதற்காக வெகுசன ஊடகங்களான பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி அலைவரிசைகள், வானொலி அலைவரிசைகளை நாடிய மக்கள் இன்று புதிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் நோக்கி அதிகம் நாட்டங் கொள்கின்றனர். ஒருவகையில், திறன்பேசியுடனான இணைய வசதியானது உலகத்தையே உள்ளங்கைக்குள் அடக்கிவிட்டது எனலாம். வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்த ஊடகமாகத் திறன்பேசி தொழிற்படுகிறது. இத்தகைய ஊடக நுகர்வானது உலகின் பல்வேறு மக்கள் தொகுதியினரிடமும் பரஸ்பரத் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதுடன், அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகள் சார்ந்தும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

## 1.2. பயன்களும் மகிழ்வூட்டுதல்களும்

ஊடகங்களின்பால் ஊடக நுகர்வோராகிய பொதுசனத்தினர் எவ்வாறு ஈர்க்கப்படுகின்றனர், எவ்வாறா்ன பயன்களையும், மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக ஊடகங்களை நுகரத் தலைப்படுகின்றனர் என்பதைப் பேசுகின்ற கோட்பாடாகப் பயன்களும், மகிழ்வூட்டுதல்களும் கோட்பாடு (Uses and Gratifications Theory) முன்வைக்கப்பட்டது. ஊடகங்களைப் பயன்படுத்தும் மக்கள் தரப்பில் இருந்து அவர்கள் எதற்காக ஊடகங்களை நுகரத்தலைப்படுகின்றனர் என்ற விடயத்தை விளக்கும் முயற்சியாக இக்கோட்பாடு அமைந்தது. இந்தவகையில் கேற்ஸ் (Katz), புளூம்லர் (Blumler) மற்றும் குரேவிச் (Gurevitch) ஆகிய தொடர்பாடல் நிபுணர்கள் இந்தக் கோட்பாட்டை 1974ஆம் ஆண்டளவில் முன்வைத்திருந்தனர்.

வெகுசன ஊடகங்களை நோக்கி பொதுமக்கள் நகர்வதற்கான அல்லது வெகுசன ஊடகங்களிலிருந்து எவ்வாறான ஆதாயங்களை மக்கள் பெறுவதற்குத் தலைப்படுகின்றார்கள் என்பதை விளக்குவதான ஓர் ஆரம்ப கட்ட முயற்சியாக, இந்த நிபுணர்களால் இந்தக் கோட்பாடு முன்வைக்கப்பட்டபோது – ஒரு தொகுதி பயன்களும், மகிழ்வூட்டுதல்களும் அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் பட்டியல் இடப்பட்டது. பிற்காலங்களில் வெகுசன ஊடகப் பயன்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க, அந்தப் பட்டியல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அது இன்னமும் வளரும் போக்கிலே அமைந்திருப்பதையும் இங்கு அவதானிக்க வேண்டியிருக்கின்றது. வெகுசன ஊடகங்களை நுகரும் மக்கள் எவ்வாறான சமூக, உளவியல், பண்பாட்டுத் தேவைகளை நிவர்த்திக்க முனைகின்றார்கள் என்பதையும், வெகுசன ஊடகச் செயற்பாடுகளின்பால் அவர்களது எந்தெந்தத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன என்பதையும், வெகுசன ஊடகங்களை எந்தெந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற மக்கள் நாடிச்செல்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துவதாக, பட்டியற்படுத்துவதாக இந்தக் கோட்பாடு அமைந்திருக்கின்றது.

## 1.3. பெருந்தொற்றும் ஊடக நுகர்வும்

2002ஆம் ஆண்டில் சார்ஸ் (SARS), 2012 ஆம் ஆண்டில் மேர்ஸ் (MERS) போன்ற கொரோனா வைரஸ் வர்க்கத்தைச் சேர்ந்த தொற்றுநோய்கள் உலகைக் கவலையில் ஆழ்த்தி, ஒருசில நாடுகளை, பிராந்தியங்களை முடக்கியபோதும் - சீனாவின் வுஹான் நகரில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மெல்ல மெல்ல ஆரம்பித்து, இன்று சீனாவையும் கடந்து பல நாடுகளிலும் விஸ்வரூபம் எடுத்துள்ள தற்போதைய கொரோனா வைரஸ் (COVID - 19) போன்று, உலகில் நூறுக்கும் அதிகமான நாடுகளில் பரவி வியாபித்து முழுமையாக நாடுகளையே முடக்கும் அவலம் அண்மைக்காலத்தில் ஏற்பட்டதில்லை.

கடந்த இரு ஆண்டுகளாக இக்கொரோனா வைரஸ் பரவல் காரணமாக யாழ்ப்பாணச் சமூகத்திலும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. அவ்வகையில், மாற்றங் கண்டுள்ள ஊடக நுகர்வின் போக்கைக் கண்டறியும் வண்ணமும், அவ்வூடக நுகர்வு யாழ்ப்பாணச் சமூக மக்களது வாழ்வியல், உளவியல், சடங்குகள், சம்பிரதாயங்கள், கல்வி முறையியல் ஆகியவற்றில் எவ்வாறு, எந்தளவு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதையும் முறைசார்ந்து ஆராய வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

02. முன்னைய ஆய்வுகள் மீதான பார்வை

1. "இந்தியர்களின் அச்சு, வலைத்தளம், தொலைக்காட்சி ஊடகப் பழக்கவழக்கங்கள் மற்றும் விருப்பத் தெரிவுகளை புரிந்துகொள்வது: பயன்கள் மற்றும் மகிழ்வூட்டலினூடான பார்வை" என்ற ஆய்வானது 2019ஆம் ஆண்டு கலாநிதி ஷ்ரீஷா மைராரு (Dr. Shreesha Mairaru), கலாநிதி சஞ்சய் தியாகி (Dr. Sanjay Tyagi), கார்ல்டன் அசீஸ் (Carlton Azeez), கலாநிதி தினேஷ் சந்த் சர்மா (Dr. Dinesh Chand Sharma) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியத் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் மொபைல் இணையத் தரவுப் பிரிவில் தொடங்கப்பட்ட விலை யுத்தம் ஊடகங்களின் பயன்பாட்டு விருப்பங்களையும் மக்களின் பழக்கத்தையும் சீர்குலைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது எனவும், மலிவான மொபைல் தரவு ஆழமான ஸ்மார்ட்போன் ஊடுருவலுடன் இணைந்து இந்தியர்களின் அச்சு, தொலைக்காட்சி மற்றும் வலை ஊடகப் பயன்பாட்டு முறைகள் மற்றும் விருப்பங்களை புரிந்து கொள்ளவும் இவ்வாய்வு முயற்சிக்கிறது. இந்தியாவின் மிகவும் கல்வியறிவு பெற்ற மாநிலமான கேரளாவை ஆய்வுப் பகுதியாக எடுத்துக்கொண்டு, எழுமாற்றாக மாதிரித் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வினாக்கோவைகள் அடிப்படையிலான கணக்கெடுப்பு மூலம் ஆய்வில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்தவகையில், மக்களின் வெவ்வேறு ஊடகத் தெரிவுகளைப் புரிந்துகொள்வதற்கு பயன்பாடுகளும் மகிழ்வூட்டலும் கோட்பாட்டின் கட்டமைப்பில் தரவுகள் திரட்டப்பட்டன. தற்போதைய ஊடகப் பயன்பாட்டு பழக்கவழக்கங்களையும், இந்தியாவில் ஊடக நுகர்வு நடத்தையால் ஏற்பட்ட மாற்றங்களையும் இவ்வாய்வின் இறுதியில் ஆய்வாளர் கண்டறிந்துள்ளார்.

2. "சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான உயர் கல்வி மாணவர்களின் உந்துதல்: பயன்களும் மகிழ்வூட்டுதலும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது" என்ற ஆய்வானது ஈரான், மலேசியா, லண்டன் மற்றும் தென்னாபிரிக்காவிலிருந்து பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு லைலா கரிமி (Leila Karimi), ரூஹொல்லாஹ் கோடபண்டேலோ (Rouhollah Khodabandelou), மரியம் எஹ்சானி (Maryam Ehsani) மற்றும் முஹம்மது அகமது (Muhammad Ahmad) ஆகியோரால் முன்வைக்கப்பட்டது.

பயன்கள் மற்றும் மனநிறைவுக் கோட்பாட்டில் இருந்து வரையப்பட்ட இந்த ஆய்வு, ஈரானிய, மலேசிய, பிரிட்டிஷ் மற்றும் தென்னாபிரிக்க உயர்கல்வி மாணவர்களிடையே சமூக வலைப்பின்னல் தளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட மனநிறைவு மற்றும் திருப்தியை ஆய்வு செய்கின்றது. இந்த ஒப்பீடு சமூக வலைத்தளங்கள் பயனர்களின் தேவைகளை வெவ்வேறு பண்பாடுகளுடன் எவ்வாறு பூர்த்தி செய்கின்றன என்பது குறித்த முடிவுகளை வெளிப்படுத்துகிறது. பிரதிநிதி மாதிரியை பயன்படுத்தி, 2013 ஆம் ஆண்டில் இணையத்தளம் மற்றும் நேரடி வினாத்தாள்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு நாட்டிலும் சமூக வலைப்பின்னல் தளங்களில் சேரவும், பயன்படுத்தவும் மாணவர்களின் உந்துதலில் வேறுபாடுகள் காணப்பட்டன. வெவ்வேறு நாடுகளின் பண்பாட்டு வேறுபாடுகள் தான் சமூக வலைத்தளங்களின் மூலம் பெறப்படும் பயன்பாடுகளையும் மனநிறைவையும் தீர்மானிக்கக்கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

3. "இளைஞர்கள் ஊடகங்களை நுகரும் போக்கில் ஏற்படும் மாற்றங்களின் ஒப்பீடு – தெஹ்ரானின் மூன்று தலைமுறைகளினூடான ஆய்வு" எனும் ஆய்வு ஜஹந்தர் அமிரி, இப்ராஹிம் பாத்தி மற்றும் அஹமதலி அஹமத்போர் ஆகியோரால் 2020ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்

கட்டுரை தெஹ்ரானில் மூன்று தலைமுறை இளைஞர்களின் போக்குகளை கடந்த காலத்தின் குழு முறையைப் பயன்படுத்தி ஆராய்ந்து ஒப்பிடுகின்றது. அது, செய்திகளைப் பெறுவதற்கான பல்வேறு தலைமுறைப் பார்வையாளர்களின் போக்கை மாற்றக்கூடாது என்ற கொள்கையைப் பயன்படுத்துகின்றது.

தெஹ்ரானில் 15 முதல் 24 வயதிற்கிடைப்பட்ட 401 இளைஞர்களை மாதிரிகளாகத் தெரிவு செய்து தனித்தனியாக பெறப்பட்ட தரவுகளை ஆய்வு ஒப்பீடு செய்துள்ளது. இளைஞர்கள் செய்திகளைப் பெறுவதற்கான போக்கு மாறிவிட்டது மற்றும் செய்திகளைப் பெறுவதன் நன்மையை உணர்ந்து கொள்வது, செய்திகளைப் பெறுவதை எளிதில் உணர்தல், செய்திகளைப் பெறுவதில் தழுவல், உளநல விதிமுறைகள் ஆகியவற்றின் கூறுகளுக்கிடையில் ஒரு குறிப்பிடத்தக்க உறவு இருப்பது ஆகியன ஆய்வு மூலம் உறுதிப்படுத்தப்பட்டன.

முன்னை வெளிவந்த இந்த ஆய்வுகளைப் பொதுவில் நோக்குமிடத்து - இளைஞர்கள், மாணவர்கள், வயோதிபர்கள் மத்தியில் ஊடக நுகர்வு பற்றி பொதுவாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோதும், குறிப்பாக இடர்காலச் சூழலில் மக்கள் மத்தியில் ஊடக நுகர்வுகள் சார்ந்தும், அவ்வூடக நுகர்வுக்கான நோக்கங்கள் சார்ந்தும், அச்சூழ்நிலையில் ஊடக நுகர்வால் மக்களது வாழ்வியல், கல்வி முறையியல்களில் ஏற்பட்ட மாற்றங்கள் சார்ந்தும் இதுவரை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது வெளிப்படையானது. எனவே, இதுவரை தவறவிடப்பட்டிருந்த இவ் ஆய்வு இடைவெளியை மையப்படுத்தி, கொரோனா இடர்கால சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்களது ஊடக நுகர்வு சார்ந்து பயன்களும் மகிழ்வூட்டலும் கோட்பாட்டினை மையப்படுத்திய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 03. ஆய்வுப் பிரச்சினை

உலகத்தையே உலுக்கி வந்திருக்கின்ற கொரோனா பெருந்தொற்று சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த மக்களை வீட்டிற்குள் முடக்கி விட்டது. இவ் இடர்காலச் சூழ்நிலை மக்களின் நாளாந்த வாழ்வியலைச் ஸ்தம்பிக்கச் செய்ததுடன் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என அனைவரையும் தமது சாதாரண வாழ்க்கைக் காலத்திலும் பார்க்க ஒப்பீட்டளவில் இந்த இடர்காலச் சூழல் வாழ்க்கைக் காலத்தில் அதிகமாகவே ஊடகங்கள் நோக்கி நகரவைத்துள்ளதாக சமூகங்களின் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

இப் பெருந்தொற்றுக் காலச் சூழலில் மக்களின் ஊடக நுகர்வு மீதான ஈடுபாடு பல்வேறு சவால்களிற்கு மத்தியிலும் அச்சமூகங்கள் சார்ந்த தனித்துவமான வாழ்வியல் முறைகள், நடத்தைகள், கல்விமுறைகள், பண்பாட்டுச் சூழல்களில் மாற்றங்களை ஏற்படுத்தி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறான ஒருபோக்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் மத்தியிலும் நிலவுவதான தோற்றப்பாடு காணப்படுகின்றது. இத்தோற்றப்பாட்டினை ஆராய்வது அவசியமாகின்றது.

## 04. ஆய்வு வினாக்கள்

கொரோனா இடர்காலச் சூழல்களில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் மத்தியில் ஊடக நுகர்வு எவ்வாறு காணப்படுகின்றது?, எத்தகைய நோக்கங்களுக்காக மக்கள் ஊடகங்களைத் தெரிவு செய்கிறார்கள்? அவ்வூடக நுகர்வானது பாவனையாளர்களது தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியாக

அவர்களுக்கே உரித்தான வாழ்வியல் முறைகள், நடத்தைக்கோலங்கள், கல்விமுறையியல்களில் ஏதேனும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றனவா?, இம்மாற்றங்களால் யாழ்ப்பாணச் சமூக மக்கள் எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றனர் ஆகிய ஆய்வு வினாக்கள் ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டன.

05. ஆய்வின் நோக்கம்

கொரோனா இடர்காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் மத்தியிலான ஊடக நுகர்வு அவர்களது தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியாக அவர்களுக்கே உரித்தான வாழ்வியல் முறைகள், நடத்தைகள், கல்வி முறையியல்கள் போன்றவற்றில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது என்பதை அடையாளம் காணுதல் இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

இவ் இடர்காலச் சூழலில் ஊடகங்களை நுகர்வதற்கான நோக்கங்கள், அவ் ஊடக நுகர்வால் யாழ்ப்பாண சமூகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்கள், அம்மாற்றங்களால் யாழ்ப்பாணச் சமூக மக்கள் முகங்கொடுக்கும் சவால்கள் ஆகியவற்றைப் பயன்களும் மகிழ்வூட்டுதல்களும் கோட்பாட்டின் (Uses and GratificationsTheory) வழியாகக் கண்டறிதல் இந்த ஆய்வின் துணை நோக்கமாக அமைந்துள்ளது.

06. ஆய்வின் கருதுகோள்

“கொரோனா இடர்காலச் சூழலில் மக்கள் அதிகளவில் சமூக ஊடகங்களை நோக்கி நகர்ந்ததுடன் அவ்வூடகங்களில் பொழுதுபோக்குச் சார்ந்த விடயங்களை நுகர்வதிலேயே அதிக ஆர்வம் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணச் சமூக மக்களது சமூக ஊடக நுகர்வானது அவர்களது வாழ்வியற் சடங்குகள், கல்விமுறையியல்கள் ஆகியவற்றை மெய்நிகர் தளத்திற்கு நகர்த்திச் சென்றுள்ளது” என்பது இந்த ஆய்வின் கருதுகோளாக முன்வைக்கப்பட்டது.

07. ஆய்வு முறையியல்

ஆய்வுச் செயற்பாடு ஒன்றை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல ஆய்வுமுறையியல் அவசியமானதாக அமைகின்றது. ஆய்வு முறையியல் என்பது ஆய்வானது எந்த முறையினூடாக நகர்த்திச் செல்லப்படுகின்றது என்பதே ஆகும். ஆய்வுப் பிரச்சினைகளும் தன்மைகளுமே ஆய்வுமுறையியலைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆய்வில் தகவல் திரட்டும் செயற்பாடானது ஆய்வு முறையியலின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த வகையில், கொரோனா இடர்காலச் சூழ்நிலையில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் மத்தியில் காணப்பட்ட ஊடக நுகர்வு, அவர்கள் அவ்வூடகத்தினை நுகர்ந்தமைக்கான நோக்கங்கள், அவ்வூடக நுகர்வு பாவனையாளர்களது தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியாக ஏற்படுத்தி வந்த மாற்றங்கள், இம்மாற்றங்களால் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகிய விடயங்களைக் கண்டறிய அளவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

காரண காரியத்தை கண்டறிதல், பண்புகளை இனங்காணல், உள்ளடக்கத்தை ஆராய்தல் முதலியவற்றின் வழியாக ஆய்வினை முன்நோக்கி நகர்தலுக்காக இவ் ஆய்வானது பெறுதிசார் ஆய்வாக மேற்கொள்ளப்படுகிறது. பெறுதிசார் ஆய்விலே உள்ளடக்கப் பகுப்பாய்வு

(Content Analysis) மற்றும் தன் இனவரைபியல் ஆய்வாகவும் (Auto - Ethnographical Study) முன்னெடுக்கப்படுகின்றது.

தன் இனவரைபியல் முறையியலுக்கூடாக ஆய்வாளர் ஆய்வுக்களத்தில் தானும் ஓர் அங்கமாக, செயற்பாட்டாளராக, தன்னை முன்நிறுத்துவதற்கூடாக ஆய்வுக்களம் குறித்தான புரிதலும் சுயமதிப்பீட்டுடனான தகவல்களையும் சொந்த அனுபவங்களை ஆய்வுக்களத்திலிருந்து பெற்றுக்கொண்டு ஆய்வினை செயற்படுத்தக்கூடியதான முறையாக அமைகின்றது.

7.1 தரவுகள் சேகரிப்பு

7.1.1 முதனிலைத் தரவுகள்

கொரோனா இடர்காலப் பகுதியினுள் யாழ்ப்பாணச் சமூக மக்களின் ஊடக நுகர்வுப் போக்கு, அவர்களது தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியாக அவர்களது வாழ்வியல் முறைகள்,நடத்தைகள், கல்வி முறைகள் ஆகியவற்றில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளன என்பதைக் கண்டறிய ஆய்வாளர்களால் ஆய்விற்கான முதனிலைத் தரவு திரட்டல் வழிமுறையாக அவதானிப்பு பயன்படுத்தப்பட்டு, 2020 ஏப்ரல் மாதத்திலிருந்து 2021 யூன் வரையுள்ள பதினான்கு மாதகாலப்பகுதியில் வெகுசன ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களின் பயன்பாடுகள் சார்ந்து தரவுகள் திரட்டப்பட்டன.

7.2 மாதிரிகள் வடிவமைப்பு

கொரோன இடர்காலச் சூழலில் வாய்ப்பாக அமைந்த, யாழ்ப்பாணச் சமூக மக்களால் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வந்த தொலைக்காட்சி அலைவரிசைகள், சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம்(WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (YouTube) ஆகியவற்றோடு, இணையவழிப் பதிப்பாக வெளிவந்த பத்திரிகைகள் ஆகியனவும் ஆய்வாளரகளால் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன.

08. தரவுப் பகுப்பாய்வும் ஆய்வு முடிவுகளும்

ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட, கொரோனப் பெருந்தொற்றுக் காலச்சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்களால் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வந்த தொலைக்காட்சி ஊடகம், சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (YouTube), இணைய வழிப்பத்திரிகைகள் ஆகிய ஊடகங்களின் பாவனையையும், அவ்வூடகங்களில் ஒளிபரப்பு செய்யப்பட்ட மற்றும் தரவேற்றப்பட்ட பதிவுகளையும், ஆய்வாளர்கள் அவதானித்ததன் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

உலகின் போக்கினை ஒத்ததாக, யாழ்ப்பாணச் சமூக மக்கள் வாழ்வியலில் திறன்பேசி முக்கிய அங்கமாக மாறிவருகின்றமையை அவதானிக்க முடிகிறது. அத்திறன்பேசி ஊடகமானது ஒலி, ஒளி, எழுத்து எனப் பல வடிவங்களைத் தனக்குள் உள்ளடக்கி ஒருங்கிணைந்த ஊடகமாக மக்கள் கைகளில் தவழ்கிறது. இவ்வாய்ப்பானது கொரோனா நோய்த் தொற்றுக்காலங்களில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரது ஊடக நுகர்விலும் தாக்கம் செலுத்தி வருவதையும் அவதானிக்க முடிந்தது.

அந்தவகையில் முகநூல் (Facebook), வலையொளி (YouTube), புலனம் (WhatsApp) மற்றும் வைபர் (Viber) ஆகிய சமூக ஊடகங்கள் அதிகளவில் இடர்காலச் சூழலில் பயன்படுத்தப்பட்டு வந்தமை ஆய்வாளரால் அவதானிக்கப்பட்டது.

8.1 கொரோனா சூழலில் யாழ். மக்கள் மத்தியில் காணப்பட்ட செய்தி ஊடக நுகர்வு

மக்கள் வழமையாகவே தகவல், செய்திகளை அறிந்துகொள்வதற்காக அச்சு ஊடகங்களையும். இலத்திரனியல் ஊடகங்களையும் நாடுபவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், கொரோனா இடர்காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூகமக்கள் மத்தியில் அச்சு இதழ்களாக வெளிவந்த காலைக்கதிர், வலம்புரி, உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகள் இடர்கால விதிமுறைகள், விநியோகத்தில் ஏற்பட்ட தளம்பல், பணியாளர் ஆட்குறைப்பு போன்றவற்றால் தமது அச்சுப்பதிப்புக்களை நிறுத்தி மின்னிதழ்களாக மாத்திரம் வெளிவர ஆரம்பித்தது மட்டுமல்லாது, புலனக் குழுக்கள் (WhatsApp Groups), வைபர் குழுக்கள் (Viber Groups) போன்றன உருவாக்கப்பட்டு அம்மின்னிதழ்கள் மக்களிற்கிடையில் பகிரவும்பட்டன.

அதேவேளை, குறித்த பத்திரிகைகளுக்கென மாத்திரமன்றி, பொதுவிலும் புலனக் குழுக்கள் (WhatsApp Groups), வைபர் குழுக்கள் (Viber Groups) உருவாக்கப்பட்டு மின்னிதழ்கள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. உதாரணமாக, ‘SL Newspapers’ எனும் பெயரில் வைபர் குழு (Viber Group) உருவாக்கப்பட்டு அக்குழுவில் இலங்கையிலிருந்து வெளிவருகின்ற தமிழ், ஆங்கில அச்சுப் பத்திரிகைகள் மின்னிதழ்க் கோப்புக்களாக (E-Papers in pdf format) இன்றுவரை பகிரப்பட்டு வருவதையும், இந்த ஊடக நகர்வானது அச்சு ஊடகங்களையும், இலத்திரனியல் ஊடகங்களையும் நாடும் ஒரு பெறுநர்கூட்டம் மத்தியிலும் தாக்கம் செலுத்த ஆரம்பித்ததையும் அவதானிக்க முடிந்தது.

8.2 கொரோனா இடர்காலச் சூழலில் யாழ். மக்களது ஊடக நுகர்வு நோக்கங்கள்

பொதுவாகவே நாளாந்த வாழ்க்கையில் தகவல், செய்திகள், எண்ணங்கள், கருத்துக்கள் போன்றவற்றை ஏனையோர்களுடன் பரிமாறிக் கொள்வதற்கு, புதிய, புதிய தகவல்களை அறிந்துகொள்வதற்கு, உலகைப் பற்றியதும், அங்கு நடைபெறும் நிகழ்வுகள் பற்றியும் செய்தியைப் பெறுவதற்கு, மகிழ்ச்சி அடைவதற்கு, அதிகாரமிக்கவர்கள் தாக்கப்படுவதை அல்லது தோல்வியுறுவதைக் காண்பதன் மூலம் உளத்திருப்தி ஒன்றைப் பெறுவதற்கு, சக மனிதர்களுடன் இணைந்து நிகழ்வொன்றின் அல்லது சம்பவமொன்றின் அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்கு, ஆன்மீகம், தெய்வீகம் சார்ந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, வாழ்க்கையின் வழக்கமான அழுத்தங்களிலிருந்து விடுபட்டு தளர்வான அல்லது மாறுபாடான மன நிலையைப் பெறுதற்கு, மற்றவர்கள் மீது ஏற்படக்கூடிய அனுதாபங்கள் பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு,

மேலும் - தனக்கான முன்மாதிரிகளைத் தேடிக்கொள்வதற்கு, தனது அடையாளத்தை தேடுவதோடு அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, நீதியின் பாலான நம்பிக்கையை தனக்குள்ள மீள்வலியுறுத்திக் கொள்வதற்கு, காதல் உணர்வில் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு, உலகின் மீதான கட்டுப்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கு, வரலாற்று நிகழ்ச்சிகளைக் காண்பதன் மூலம் தானும் வரலாற்றின் பங்குதாரர் ஆவதற்கு, மகிழ்ச்சி தராத உவகை அற்ற உணர்வுகளைப் புனிதப்படுத்திக் கொள்வதற்கு, அழகு என்பதை மாத்திரம் அல்ல அழகின்மையையும் தெரிந்துகொள்வதுடன் அதை அனுபவித்துக் கொள்ளதற்கு, நீதி, ஆன்மிகம், பண்பாட்டு விழுமியங்களை இன்னமும் உறுதியாக்கிக் கொள்வதற்கு ஆகிய காரணங்களே பொதுமக்கள் ஊடகங்களை நாடுவதற்கான

காரணங்களாக பயன்களும் மகிழ்வூட்டுதல்களும் கோட்பாட்டின் (Uses and Gratifications Theory) அடிப்படையில் அவதானிக்கப்பட்டாலும் - இந்தக் காரணங்கள் இன்னமும் விரிவாக்கம் பெற்று செல்லும் போக்கினை இக்கொரோனா இடர்காலச் சூழலிலும் ஆய்வாளரால் அவதானிக்க முடிந்தது.

அதிலும் குறிப்பாக, கொரோனா இடர்காலச் சூழலில் மக்கள் வீட்டினுள் இருக்கத் தலைப்பட்டதால் அல்லது நிர்ப்பந்திக்கப்பட்டதால் நாளாந்தம் நாட்டில் என்ன நடக்கிறது?, கொரோனாப் பாதிப்புக்கள் சார்ந்த தகவல்கள், கொரோனா நோய்ப்பரவல் சார்ந்த விழிப்புணர்வு, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் போன்ற விடயங்களை அறிந்து கொள்வதற்காக தொலைக்காட்சி, வானொலி, மின்னிழ்கள், சமூக ஊடகங்களை மக்கள் அதிகம் நாடினார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் அதிகார பூர்வமான வெளியீடுகள் சார்ந்த தகவல்கள், அறிக்கைகள் (Official Media Releases of Government of Sri Lanka) 'Government Information' எனும் வைபர் குழுவில் (Viber Group) பகிரப்பட்டு வந்தமை இத்தேவையின் பாற்பட்டதே.

E- Banking, E- Shopping, E- Paying என இணைய வழியான சேவைகளை யாழ்ப்பாணச் சமூக மக்கள் இக் காலப்பகுதியில் அதிகம் பயன்படுத்தியிருந்தமையையும் அவதானிக்க முடிகிறது. உணவுப் பொருட்கள் தொடரிணை (ஒன்லைன்) மூலம் பணம் செலுத்தப்பட்டு வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், சமைத்த உணவுகள் கூட வீடுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கொரோனாப் பெருந்தொற்று இடர்காலத்தில் அதிகளவான தகவல்கள், செய்திகள், கல்வி சார்ந்த விடயங்கள் என்பன புலனக் குழுக்கள் (WhatsApp Groups), வைபர் குழுக்கள் (Viber Groups) தனிச்சிறப்பாக உருவாக்கப்பட்டு மக்களுக்கிடையே பகிரப்பட்டன. கல்வி வளங்கள் எனும் வைபர் குழுவில் (Viber Group) தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான வகுப்புக்களுக்குரிய சூம் இணைப்புக்களும் (Zoom Links), தேசிய கல்வி நிறுவகம் சார்ந்த NIE Education வைபர் குழுவில் (Viber Group) பாடசாலை மாணவர்களுக்கான பாடவிதானங்கள் சார்ந்த வகுப்புகளுக்குரிய சூம் இணைப்புக்களும் (Zoom Links) பகிரப்பட்டன. அந்தவகையில் மாணவர்களுக்கான கல்வித் தேவையை அதிகமாக சமூக ஊடகங்களே பூர்த்திசெய்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## 8.3 கொரோனா இடர்காலச் சூழலில் யாழ்ப்பாண சமூக மக்களின் ஊடக நுகர்வானது மக்கள்மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்

### 8.3.1 வாழ்வியல் முறைகள்

ஒவ்வொரு மனிதனதும் அன்றாடச் செயற்பாடுகள், உணவுப் பழக்க வழக்கங்கள், உளவியல் தேவைகள், பொழுதுபோக்குகள், உறவாடல்கள், வேலை, குடும்ப சுழற்சிகள் என வாழ்க்கையின் நாளாந்த அம்சங்களை அன்றாட வாழ்வியல் குறிக்கின்றது. இவ் வாழ்க்கை முறையியல்களில் பொதுவாகவே ஊடகங்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் தனிமனிதர்களினதும், மக்கள் குழுக்களினதும் உணவுப் பழக்கவழக்கங்கள், உடைகள் அணியும் விதங்கள்,தாங்கள் வாழும் வீடமைப்புக்கள் போன்றவற்றில் ஊடகங்கள் தாக்கம் செலுத்தி வருகின்றன. அதிலும், குறிப்பாக யாழ்ப்பாண மக்களது வாழ்வியல் முறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களில் ஊடகங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தகுந்தது எனலாம்.

அதிகமாக பிட்டு, இடியப்பம், குத்தரிசிச்சோறு போன்ற உணவுகளை உண்டு வந்த யாழ்ப்பாண மக்கள் மத்தியில் துரித உணவுகளான பீட்சா, பேகர், நூடில்ஸ் போன்ற மேலைத்தேய உணவுப்பழக்கங்கள், அவர்களது உணவுப்பழக்கங்களில் ஊடுருவியமையையும், அதுவும் குறிப்பாக இன்றைய இளைய சமூகத்தினரிடையே இத்துரித உணவுப்பழக்கங்கள் அதிகமாகக் காணப்படுவதையும் அண்மைக்காலத்தில் காணமுடிந்தது. ஆனால், இக் கொரோனா இடர்காலச் சூழ்நிலையில் மக்கள் வெளியில் செல்ல முடியாததால் தாங்களே வீட்டுத்தோட்டங்கள் அமைத்து பயிர்ச்செய்கையை மேற்கொண்ட செயற்பாடுகள் சார்ந்து அவர்களால் பதிவேற்றப்பட்ட முகநூல் பதிவுகள் ஆய்வாளர்களால் அவதானத்திற்குட்பட்டதுடன், மறுபடியும் தமது சமூகத்திற்கே உரிய பாரம்பரிய உணவுப்பழக்கங்களிற்கு மக்கள் அதிகம் சென்றமையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இக்காலகட்டங்களில் மக்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டமை ஒப்பீட்டளவில் பழைய கால வாழ்க்கை முறைகளை கண்முன் காட்டிச் சென்றுள்ளது எனக் கூறுமளவிற்குப் முகநூல் பதிவுகள், படங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தன. அதாவது, முன்னாட்களில் முகநூல் நண்பர்கள் முகநூலில் இடும் பதிவுகளிலும் பார்க்க, இக்காலகட்டத்தில் இடப்பட்ட பதிவுகளில் அதிகம் அவர்கள் அவர்களது குடும்ப உறவுகளுடன் ஒன்றாகச் சமைத்து உண்ணும் புகைப்படங்கள், விளையாடும் புகைப்படங்கள் போன்றன ஒப்பீட்டு ரீதியில் அதிகளவில் பதிவேற்றம் செய்யப்பட்டதையும் இக்காலப்பகுதிகளில் அவதானிக்க முடிந்தது.

மக்களது வாழ்வியல் சடங்குகளில் பல உறவுகள் கூடி அவர்களின் வாழ்த்துக்களுடன் நேரடியாக கொண்டாடப்படும் சடங்குகள் இப்பெருந்தொற்றுக் காலத்தில் அவரவர் தமது வீடுகளில் இருந்தவாறே சமூக ஊடகங்களின் வாயிலான இணையவழி நேரடி ஒளிபரப்பின் மூலம் தமது உறவுகளின் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டமையாக மாறிப்போனது. இவ்விடர்காலச் சூழலில் இடம்பெற்ற பிறந்தநாள் கொண்டாட்டங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமண வைபவங்கள், மரணக்கிரியைகள் போன்றன வலையொளி (YouTube), முகநூல் (Facebook), சூம் செயலி (Zoom App) ஆகிய சமூக ஊடகத் தளங்கள் வாயிலாக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதன் மூலம், உறவுகளிற்கிடையில் அவை பகிரவும்பட்டன. இச்செயற்பாடுகள் இந்த இடர்காலச் சூழலில் மக்கள் வாழ்வியலோடு சமூக ஊடகங்கள் அதிகமாக இணைந்தமையை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக, யாழ்ப்பாணச் சமூக மக்களது இச்சமூக ஊடக நுகர்வானது கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் அதிகளவில் அமைந்திருந்தமை அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை முறைகளிலும் பெரும் மாற்றங்களை உருவாக்கி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. வீட்டுக்குள் முடக்கப்பட்ட மக்கள் தங்களது பொழுதுபோக்கிற்காகவும், தனது தனிமை யைப் போக்குவதற்காகவும் ரிக்ரொக், முகநூல் பக்கங்களில் தங்களது பாடல், ஆடல், எழுத்துத் திறமைகளை வெளிக்கொணர்ந்தார்கள்.

வெகுசன ஊடகங்கள் வழியாக ஒளிபரப்பப்படும் இந்திய நெடுந்தொடர்கள் இல்லத்தரசிகளின் வாழ்வின் பொழுதுபோக்கு அம்சமாக நெடுங்காலமாக இருந்து வருகின்ற நிலையில், திடீரென இவ் இடர்காலச் சூழலில் அவை இடைநிறுத்தப்பட்டு ஏற்கனவே ஒளிபரப்பு செய்யப்பட்ட பகுதிகள் மறுபடியும் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இதனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்த பெண்கள் களிப்படைவதற்காக அழகுக்குறிப்புகள், ஆடை அணிகலங்கள், சமையல் குறிப்புகள், பாடல்களைக் கேட்டல், பாடல்களைப் பகிர்தல் என முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) ஆகிய சமூக ஊடகங்கள் மீது கவனம் திரும்பியதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும், இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பெண்களிடையே அதிகளவான சமூக ஊடகச் செயலிகளின் பாவனை பயன்பாட்டில் இருந்தது. அதிலும் குறிப்பாக, பெண்களின் நேரடிப் பங்களிப்பு அதிகமாகக் காணப்பட்டது. ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணப் பெண்கள் சமூக வலைத்தளங்களில் தங்களின் புகைப்படங்களைப் பதிவேற்றம் செய்வதற்கே சிந்தித்த காலம் சென்று, இடர்காலச் சூழலில் பல பெண்கள் தமக்கென வலையொளிப் (YouTube) பக்கங்கள் ஆரம்பித்து, அதில் நேரடி ஒளிபரப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றமை அண்மைய போக்காகியுள்ளது.

அத்தோடு, கொரோனா இடர்காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூக இளைஞர்கள் உருவாக்கிய சமூக வலைத்தளங்கள் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய விடயங்களையும், தொன்மைகளையும் மற்றும் பண்பாடுளையும் பேசுவதாக அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

பயன்களும் மகிழ்வூட்டல் கோட்பாட்டில் கூறப்பட்ட பயன்களின்பால், இடர்காலப் பகுதியில் யாழ்ப்பாணச் சமூக மக்கள் தங்களின் பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், தகவல் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், தங்களின் தனிமையைப் போக்குவதற்காவும், தங்களின் படைப்பாக்கத் திறன்களை வெளிக்கொண்டு வருவதற்காகவும் சமூக ஊடகங்களை அதிகம் பயன்படுத்தியிருந்தார்கள் என்பது இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது.

### 8.3.2 கல்வி முறையியல்

கடந்த இரு ஆண்டுகளாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் இடர்காலச்சூழல் கல்வி முறையியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. கொரோனாச் சூழல் மாணவர்கள், கல்வியியலாளர்கள் என சகல தரப்பினரையும் வகுப்பறைக் கற்றலில் இருந்து இன்று மெய்நிகர் தளத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாண சமூகத்தில் சூம் (Zoom) செயலிகள் ஊடாக மாணவர்களுக்கான வகுப்புக்கள் இடம்பெற்று வருவதுடன், அவர்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகள், மேலதிக தகவல்களுக்கென புலனம் (WhatsApp) மற்றும் வைபர் (Viber) ஊடாகக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை பகிரப்படும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

இடர்காலச் சூழ்நிலையில் வசந்தம், நேத்ரா, கல்வி தொலைக்காட்சி அலை வரிசைகளில் மாணவர்களுக்குரிய கற்றல் சார்ந்த விடயங்கள் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இந்தவகையில் இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சி அலைவரிசைகளும் கல்விச் செயற்பாடுகளில் கணிசமான பங்களிப்பு வழங்கியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

வீட்டில் இருக்கும் மாணவர்களின் கற்றல் வினைத்திறனை அதிகரிக்க சமூக ஊடகங்களில் பொதுக்குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றினூடாகப் பொது அறிவுத் தகவல்கள், மின்னிதழ்கள், இலத்திரனியல் சஞ்சிகைகள் போன்றன பகிரப்படுவதோடு, கல்விச் செயற்பாடுகள் சார்ந்த பல குழுக்கள் உருவாக்கப்பட்டு கற்றல் நடவடிக்கைகளும், அதேபோன்று பரீட்சைகளுக்கான தயார்படுத்தல்களும் இடம்பெற்று வருகின்றமையையும் காண முடிகின்றது.

ஆய்வுகள், விழிப்புணர்வுகள், கல்விப்புலங்கள் சார்ந்த தகவல் பகிர்வுச் செயற்பாடுகள் துறை சார்ந்த வளவாளர்களால் நடாத்தப்பட்டு வருகின்ற செயற்பாடுகளும், இளையோருக்கு மட்டுமின்றி கல்விப்புலத்தில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் பயனுள்ளதாக அவை அமைவதும் சமூக ஊடகங்களினூடான பதிவுகள் மூலம் கண்ணோட்டம் செய்யப்படுகிறது.

இத்தகைய இடர்காலச் சூழலில் கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் கல்விச் சமூகத்திற்கு கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக அமைந்திருப்பது கண்கூடு.

இவ்விடர் காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூக மக்களின் ஊடக நுகர்வு சார்ந்த அவதானத்தினடிப்படையில், ஒப்பீட்டு ரீதியில் முன்னைய காலப்பகுதியை விட ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி முறையியல்களில் சமூக ஊடகங்களே அதிக தாக்கம் செலுத்தி வந்துள்ளன. அதிலும், குறிப்பாக யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினுடைய கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான தளமாக சமூக ஊடகங்கள் செயற்பட்டமை பயன்களும் மகிழ்வூட்டுதலும் கோட்பாட்டின் அடிப்படையில் அவதானத்திற்கு உட்படுத்தப்படுகின்றது.

## 8.4 இடர்காலச் சூழலில் யாழ். மக்களின் மத்தியில் ஏற்பட்ட ஊடக நுகர்வு மாற்றங்களால் அம்மக்கள் எதிர்கொண்ட சவால்கள்

உறவுகள் அதிகமாக ஒன்றிணைவது சடங்குகள், நிகழ்வுகளின்போதே தான். ஆனால், இன்று வலையொளி (YouTube), முகநூல் (Facebook), சூம் செயலி (Zoom App) ஆகிய சமூக ஊடகத் தளங்கள் வாயிலாக நேரடி ஒளிபரப்பு மூலம் அவை பகிரப்படுவதால் அதற்குரிய சந்தர்ப்பங்களை இச்சூழலில் இழந்திருப்பதாக முகநூல் (Facebook), புலனம் (WhatsApp) ஆகிய சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் பதிவுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

இக்காலப்பகுதியில் வயது வேறுபாடின்றி அனைவருமே ரிக்ரொக் (TikTok) செயலிப்பாவனைக்குள் தம்மை ஆட்படுத்திக் கொண்டமையால், அவர்களது நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டமை அதாவது கமராக்களிற்கு முன் பொதுவில் முகங்காட்டத் தயங்குபவர்கள் கூட ரிக்ரொக்களில் (TikTok) தங்களது ஆர்வத்தினைக் காட்டிவருவதையும், இக்காலச் சூழலில்தான் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் ரிக்ரொக் (TikTok) என்ற செயலியினுடைய பாவனை அதிகம் செல்வாக்குச் செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இடர்காலச் சூழ்நிலையில் ஆரம்ப கல்வி முதல் உயர் கல்வி வரை மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் மெய்நிகர் தளத்திற்கு நகர்ந்துள்ளதால், வயது வேறுபாடின்றி அனைவராலும் திறன்பேசி கையாளுகைக்கு உட்படுத்தப்படுகிறது. மாணவர்கள் திறன்பேசியுடனே அதிக நேரத்தைச் செலவிடுவதால் பார்வைக் கோளாறுகள், தலைவலி, உடல் நோ, மன உளைச்சல், தனிமை, அதிக கோபம், மந்தநிலை போன்ற உள ரீதியான பாதிப்புக்களும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன என கல்வியாளர்கள் கூறுகின்றனர்.

ஒப்பீட்டு ரீதியில், கொரோனா காலத்திற்கு முற்பட்ட கல்விச் சூழலில் இருந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையிலான உயிர்த்தன்மையான நேரடியான தொடர்பாடல் இவ்விடர் காலச் சூழலில் இல்லாது போனதால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான உறவுநிலையில் தளம்பல் நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது. மெய்நிகர் தளத்தினைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் பலரும் தன்னிசைவாக ஒரு பொறியுடன் பேசுவது போன்றதோர் உணர்வு ஏற்படுவதைப் பதிவுசெய்துள்ளனர். இவ்வுணர்வு உளரீதியான அழுத்தத்தை அவர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படுத்தக்கூடும்.

யாழ். மாவட்டத்தினுள் வாழும் மக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடும்பங்கள் பொருளாதார சிக்கல்களால் பிள்ளைகளிற்குத் திறன்பேசிகளை பெற்றுக்கொடுக்க முடியாத சூழலில் வாழ்ந்துகொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான குடும்பங்களில் உள்ள மாணவர்கள் மத்தியில் கற்றல் செயற்பாடுகளில் பங்குபற்ற முடியாத நிலைமைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, மாணவர்கள் வாழும் இடங்களில் திறன்பேசியைப் பாவிப்பதற்குரிய போதிய இணைய இணைப்பு வலு இல்லாமை (Coverage Problem), மாணவர்கள், ஆசிரியர்கள், கிராமப்புறத்தில் வாழும் மக்கள் எனச் சிலர் திறன்பேசியை கையாள்வதற்குரிய தொழில்நுட்ப அறிவின்றி தமது கல்வித்தேவை, அன்றாடத்தேவைகளை நிகழ்நிலை (Online) மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்குச் சிரமப்பட்டமையும் சவால்களாக அடையாளங் காணப்படுகின்றன.

09. தொகுப்புரை

ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட வாய்ப்பாக அமைந்த சமூக ஊடகங்களது செயற்பாடுகள் சார்ந்து ஆய்வாளர்களது அவதானத்தின் மூலம் பெறப்பட்ட தரவுப் பகுப்பாய்வுகளின் பிரகாரம், 'கொரோனா இடர்கால சூழலில் யாழ்ப்பாண மக்கள் அதிகளவில் புதிய ஊடகங்களை நோக்கியே நகர்ந்தனர் அதிலும் குறிப்பாகச் அதிலும் குறிப்பாகச் சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (YouTube) ஆகிய சமூக ஊடகங்களின் பாவனையே அதிகளவில் காணப்பட்டது' என்கின்ற முடிவே பெறப்பட்டது.

தொலைக்காட்சி, இணையப் பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களது செயற்பாடுகள் சார்ந்து ஆய்வாளரது அவதானத்தின் மூலம் பெறப்பட்ட தரவுப் பகுப்பாய்வுகளின் பிரகாரம், மக்கள் தங்களின் பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், தகவல்கள், செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், தங்களின் தனிமையைப் போக்குவதற்காவும், தங்களின் படைப்பாக்கத் திறன்களை வெளிக்கொண்டு வருவதற்காகவும், கற்றல் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காகவும் இடர்கால சூழலில் ஊடகங்களை நுகர்ந்தமைக்கான நோக்கங்களாக ஆய்வாளரால் இனங்காணப்பட்டன.

மேலும், ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட சமூக ஊடகங்களது செயற்பாடுகள் சார்ந்து ஆய்வாளரது அவதானத்தின் மூலம் பெறப்பட்ட தரவுப் பகுப்பாய்வுகளின் பிரகாரம், 'யாழ்ப்பாண மக்களது சமூக ஊடக நுகர்வானது அவர்களது வாழ்வியற் சடங்குகள் மற்றும் கல்வி முறையியல்கள் ஆகியவற்றை மெய்நிகர் தளத்திற்கு நகர்த்திச் சென்றுள்ளது' எனவும் ஆய்வாளரால் அறியப்பட்டது.

இடர்காலச் சூழலில் யாழ்ப்பாண மக்கள் சமூக ஊடக நுகர்வால் எதிர்கொண்ட சவால்களாக- 'கற்றலுக்குரிய தளமாக திறன்பேசி, கணினி எனத் தொடர்ந்தும் அவ்வூடகங்களைப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் உடல், உளரீதியான பாதிப்புக்கள், கண்பார்வைகள் பாதிக்கப்படல், உறவுகளிற்கிடையில் உயிர்த்துடிப்பற்ற தொடர்பாடல், குறிப்பிடத்தக்க மக்களின் மத்தியில் புதிய ஊடகங்கள், சமூக ஊடகங்களைப் கையாள்வதற்குரிய போதிய தொழில்நுட்ப அறிவு காணப்படாமை, ஊடகக் கருவிகளைத் தமக்கெனப் பெற்றுக்கொள்வதற்குரிய போதிய பணவசதி இல்லாமை, சமூக ஊடகங்களிற்கு அடிமையாதல் என்பவற்றை அடையாளப்படுத்தலாம்.

உசாத்துணைகள்:

ரகுராம், எஸ். (2015). அபிவிருத்தித் தொடர்பாடல் மாற்று நோக்கி, கொழும்பு : சேமமடு பதிப்பகம்.

தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்: ஆசிரியர் வழிகாட்டி (2018). மஹரகம, இலங்கை: தேசியக் கல்வி நிறுவகம்.

Shreesha Mairaru, Sanjay Tyagi, Carlton Azeez, Dinesh Chand Sharma. (2019*). 'Understanding the print, web, television media habits and preferences of Indians: A uses and gratification perspective',* Journal of Content, Community & Communication, Vol.9.

Leila Karimi, Rouhollah Khodabandelou, Maryam Ehsani, Muhammad Ahmad. (2014). '*Applying the uses and gratifications theory to compare higher education students'* motivation for using social networking sites: experiences from Iran, Malaysia, United Kingdom, and South Africa', contemporary educational technology.

Jahandar Amir, Ebrahim Fathy, Ahmadali Ahmadpor. (2020). '*comparison of changes in the tendency of young people to consume news (Case study of three generations form Tehran)*', *IRIB University Faculty, journal of culture - communication studies.*

https://www.virakesari.lk/article/78022

https://worldscholarshipforum.com/ta/how-social-media-benefits-students/இளைஞர்கள் புதிய ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் என 2018 இற்கான யுனிசெப் (UNICEF)